भारत का राजपत्र

# The Gazette of India

இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

**சிறப்பிதழ்**

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्राधिकार प्राकारित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

नई दिल्ली, सोमवार, 6 मार्च, 2000/1922 सका

New Delhi, Monday, 6th March 2000/1922 Saga

புது தில்லி, 2000, மார்ச் 6ஆம் நாள் திங்கட்கிழமை/1922 சக

## Ministry of Law, Justice and Company Affairs

(Legislative Department), New Delhi

சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம் (சட்டமியற்றுத் துறை), புதுதில்லி

The translation in Tamil of the Judicial Officers Protection Act, 1850 (18 of 1850), The Powers of Attorney Act, 1882 (7 of 1882), The Prevention of Seditious Meetings Act, 1911 (10 of 1911), The Destructive Insects and Pests Act, 1914 (2 of 1914), The Collections of Statistics Act, 1953 (32 of 1953), The State Armed Police Forces (Extension of Laws) Act, 1952 (63 of 1952), The Foreign Jurisdiction Act, 1947 (47 of 1947), are hereby published under the Authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under Clause (a) Section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

நீதித்துறை அலுவலர்கள் பாதுகாப்புச் சட்டம், 1850 (18/1850), பகர அதிகாரஆவணச் சட்டம், 1882 (7/1882), அரசாங்கத்திற்கு எதிரான கிளர்ச்சிக் கூட்டங்கள் தடுப்புச் சட்டம், 1911 (10/1911), அழிவு செய்யும் பூச்சிகள் மற்றும் நாசகாரப் பூச்சிகள் சட்டம், 1914 (2/1914), புள்ளி விவரங்களைத் தொகுத்தல் சட்டம், 1953 (32/1953), மாநில ஆயுதக் காவற்படைகள் (சட்டங்கள் நீட்டிப்பு) சட்டம், 1952 (63/1952), அயல்நாட்டு அதிகாரவரம்புச் சட்டம், 1947 (47/1947), ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு, குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன்பிரிவு 2இன் கூறு (அ) இன்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல்வேண்டும்.

[Price Rs. 22.00]

# நீதித்துறை அலுவலர்கள் பாதுகாப்புச் சட்டம், 1850

## (சட்ட எண் 18/1850)

### முகப்புரை

[1850, ஏப்ரல் 4]

**நீதித்துறை அலுவலர்களைப் பாதுகாப்பதற்கான ஒரு சட்டம்**

குற்றவியல் நடுவர்களையும் நீதிமுறையில் செயற்படுகின்ற மற்றவர்களையும் பெரிதும் பாதுகாப்பதற்காக, பின்வருமாறு சட்டம் இயற்றப்படுகிறது:-

நல்லெண்ணத்தில் செய்யப்படுகின்ற அலுவல்முறை செயல்களுக்காக நீதிமுறையில் செயற்படுகின்ற அலுவலர்களின் மற்றும் பிடியாணை களையும் ஆணைகளையும் நிறைவேற்றும் அலுவலர்களின் உரிமை வழக்கிற்குக் கடப்பாடின்மை.

1. நீதிபதி, குற்றவியல் நடுவர், அமைதிக்காப்பு நடுவர், ஆட்சியர் அல்லது நீதிமுறையில் செயல்படுகிற பிற நபர் எவரும், தன்னுடைய அதிகாரவரம்பின் எல்லைக்குள் இருந்தாலும், இல்லாவிட்டாலும், தனது நீதிமுறைக் கடமைகளை ஆற்றுகையில், அவர் செய்த செயல் அல்லது செய்யுமாறு ஆணையிட்ட செயல் எதற்காகவும், அவர் மீது உரிமைவழக்கு நீதிமன்றம் எதிலும், வழக்கிடப்படுவதற்கு உள்ளாகமாட்டார்; ஆனால், அவர், முறையிடப்பட்ட அந்தச் செயலைச் செய்வதற்கு அல்லது செய்யுமாறு ஆணையிடுவதற்கு அவருக்கு அதிகாரம் இருப்பதாக அந்த நேரத்தில் நல்லெண்ணத்துடன் நம்பியிருத்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய நீதிபதி, குற்றவியல் நடுவர், அமைதிக்காப்பு நடுவர், ஆட்சியர் அல்லது நீதி முறையில் செயற்படுகின்ற பிற நபர் எவரின் சட்டப்படியான பிடியாணைகளை அல்லது ஆணைகளை நிறைவேற்றுவதற்குக் கட்டுப்பட்ட நீதிமன்றம் எதனின் அலுவலர் அல்லது பிற நபர் எவரும், அவற்றைப் பிறப்பிக்கின்ற நபரின் அதிகாரவரம்பிற்குள் இருப்பாராயின், நிறைவேற்றுவதற்கு அவர் கட்டுப்பட்டவராக இருந்திருக்கக்கூடிய பிடியாணை அல்லது ஆணை எதனையும் நிறைவேற்றுவதற்காக, உரிமைவழக்கு நீதிமன்றம் எதிலும், வழக்கிடப்படுவதற்கு உள்ளாகமாட்டார்.